(v) அவையினர் குழுவிற்குத் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1968-69-ம் ஆண்டுக்கான அவையினர் குழுவிற்கு இப்பேரவையின பதினொன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட பதினொன்று உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டார்கள் :—

1. திரு. கரு. சீமைச்சாமி.
2. திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம்.
3. திரு. ஏ. அ. சுப்பராஜா.
4. திரு. எம். சுப்பிரமணிய கவுண்டர்.
5. திரு. இரா. மாணிக்கவாசகம்.
6. திரு. பி. ஜெயராமன்.
7. திரு. சோ. அழகர்சாமி.
8. திரு. பெ. பெரியசாமி.
9. திருமதி எஸ். குப்பம்மாள்.
10. திரு. என். எஸ். வி. சித்தன்.
11. திரு. கொ. இர. ஞானசம்பந்தன்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்கு சமமாக இருப்பதால், 1968-69-ம் ஆண்டு அவையினர் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

பேரவையின் 221 (1)-வது விதிக்கிணங்க :—

1. திரு. கே. சகாதேவக் கண்டர்
2. திரு. சி. நஞ்சன்
3. திரு. ரா. ரா. முனுசாமி
4. திரு. எஸ். கணேசன்

ஆகியவர்களை இக்குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்.

பேரவையின் துணைத் தலைவர் அவர்கள், அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவர்.

(iv) அரசினர் உறுதிமொழிக் குழுவிற்குத் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டப் பேரவையின் 214 (1)-வது விதியின்கீழ், பின்வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களை அரசினர் உறுதிமொழிக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறேன்.

1. திரு. க. மு. இராசகோபால்.
2. திரு. நா. நாச்சிமுத்து.